# 28

# புதிதாகத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குப் பாடங்கள்

## (7:1–6)

நாம் “பரிசுத்தமாக்கப்படுதல்” பற்றிய நமது படிப்பைத் தொடருகிறோம்: தேவனால் பிரித்து வைக்கப்பட்டிருத்தலும், பின்பு புதிய தரநிலைக்குச் சீர்பொருத்தமான வாழ்வை வாழ்தலும். ரோமர் 6ல் பவுல் தமது செய்தியை எடுத்துரைப்பதற்கு இரண்டு ஒப்புவமைகளைப் பயன்படுத்தினார்: நீங்கள் பாவத்திற்கு மரித்திருக்கிறீர்கள் (எனவே அதற்கு ஒப்பச் *செயல்படுங்கள்*); நீங்கள் தேவனுக்கு அடிமைகளாக இருக்கிறீர்கள் (எனவே அதற்கு ஒப்பச் *செயல்படுங்கள்*). ரோமர் 7ல் பவுல், மூன்றாவது ஒப்புவமையை அறிமுகப்படுத்தினார். நீங்கள் கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருக்கிறீர்கள் (4ம் வசனத்தைக் காணவும்) (எனவே அதற்கு ஒப்பச் *செயல்படுங்கள்*). ரோமர் 7ன் முதல் ஆறு வசனங்கள் பினவருமாறு வாசிக்கப்படுகின்றன:

> நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா? அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள், புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையா யிருக்கிறாள். ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல.
>
> அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று

விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

பவுல், கிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையிலுள்ள உறவை விவரிப்பதற்குத் திருமணம் என்ற கருத்தை அடிக்கடி பயன்படுத்தினார். 2 கொரிந்தியர் 11:2ல் அவர், "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார். 1 கொரிந்தியர் 6:17ல் அவர் கிறிஸ்துவுடன் நாம் "இணைந்திருத்தல்" பற்றிப் பேசினார். இந்த ஒப்புவமையின் நன்கு அறியப்பட்ட அவரது பயன்பாடு எபேசியர் 5:22-32ல் உள்ளது:

> மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரை சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.
>
> புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன்.

நாம் இன்னும் கடந்து செல்வதற்கு முன்பாக, "நியாயப்பிரமாணம்" என்பதே 7ம் அதிகாரத்தின் பிரதான ஆய்வுக்கருத்தாக உள்ளது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். J. D. தாமஸ் என்பவர், "6ம் அதிகாரத்தில் பாவத்துடன் கிறிஸ்தவரின் உறவு என்பதும், 7ம் அதிகாரத்தில் நியாயப்பிரமாணத்துடன் கிறிஸ்தவரின் உறவு என்பதும் பொதுவான பாடப்பொருள்களாக உள்ளன" என்று எழுதினார்.[1] நியாயப்பிரமாணம் என்ற ஆய்வுக்கருத்தைப் பற்றி நாம் நமது அடுத்தபாடத்தில் கலந்துரையாடுவோம். இருப்பினும், நாம் அதைச் செய்வதற்கு முன்னர், கிறிஸ்துவுடனான நமது திருமணம் குறித்த சில அடிப்படைக் கொள்கைகளை 1 முதல் 6 வரையிலான வசனங்களிலிருந்து நான் எடுத்துரைக்க விரும்புகிறேன். இது நமது வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய

*வேறுபாடுகளை* வலியுறுத்த நான் விசேஷமாக விரும்புகிறேன்.

பௌதீக மட்டம் ஒன்றில், திருமணம் என்றால் என்ன என்பது பற்றிச் சிலர் கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. அவர்கள் திருமணம் செய்துகொள்கின்றனர். இருப்பினும், தாங்கள் திருமணம் செய்துகொள்ளா திருப்பவர்களைப் போன்றே அவர்கள் இன்னமும் வாழ்கின்றனர்.[2] ஆவிக்குரிய வகையிலும் இது உண்மையாகவே உள்ளது. சிலர், கிறிஸ்துவுடன் திருமணம் செய்விக்கப்பட்டிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றிக் கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. அவர்கள் கிறிஸ்துவினு டைய மணவாட்டியின் (சபையின்) அங்கமாகின்றனர் ஆனாலும் தாங்கள் கர்த்தருக்கு என்று உறுதிப்பாடு எதையும் மேற்கொண்டிராதது போல் வாழத் தொடருகின்றனர்.

நான் இந்த எடுத்துரைப்பை "புதிதாகத் திருமணம் செய்துகொண்டவர் களுக்குப் பாடங்கள்" என்று அழைக்கிறேன். ஒரு துணையுடன் சட்டப்பூர்வமாக இணைதல் என்ற கருத்தின்மீதல்ல, ஆனால் கிறிஸ்துவுடனான நமது ஆவிக்குரிய உறவின்மீதே எனது வலியுறுத்தம் இருக்கும். அதேவேளையில், நீங்கள் பூமிக்குரிய உங்கள் திருமணத் துணைவருடன்/துணைவியுடன் எவ்வாறு உறவுபட்டிருக்க வேண்டும் என்பது பற்றிச் சிலவிஷயங்களையும் கற்றுக்கொள்ளலாம். எபேசியர் 5:22-32ல், கிறிஸ்து மற்றும் சபை ஆகியோரின்மீதே பவுலின் கவனக்குவிப்பு இருந்தது (வசனம் 32ஐக் காணவும்), ஆனால் நாம் அந்த வசனப் பகுதியை இன்னமும், கணவன்/மனைவி உறவு பற்றிக் கற்றுக்கொள்ளப் பயன்படுத்துவோம்.

## அறிந்தவர்களாயிருங்கள் (7:1-4)

நாம் கிறிஸ்தவர்களாகிறபோது, நாம் இயேசுவை "விவாகம்" செய்துகொள் கிறோம் என்பதை நாம் *அறிவது* அவசியமாகிறது. அந்த சத்தியமானது நமது வேதபாடப்பகுதியில் 4ம் வசனத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அந்த வசனத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம் அதற்கு முன்பாகவுள்ள வசனங்களை ஆராய வேண்டியது அவசியமாக உள்ளது.

### ஒரு கொள்கை (வசனம் 1)

[ஆங்கில வேதாகமத்தில்] 7ம் அதிகாரத்தில் "or" (அல்லது) என்ற வார்த்தை யுடன் தொடங்குகிறது. இது இவ்வசனப்பகுதியை, இதற்கு முந்திய பகுதியான 6ம் அதிகாரத்தில் உள்ள "பரிசுத்தமாகுதல்" என்பதன்மீதான வசனப்பகுதியுடன் பிணைக்கிறது. "அறியாமலிருக்கிறீர்களா?" என்று மூன்றாம் முறையாகப் பவுல் இவ்விடத்தில் கேட்கிறார் (6:3, 16 ஆகிய வசனங்களைக் காணவும்). ஒவ்வொரு முறையும், அவர் கிறிஸ்தவர்களின் வாழ்வு ஒரு பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்வாக உள்ளது என்பது பற்றிய சிந்தனையை அறிமுகப்படுத்தவே அவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார். பவுல் தாம் போதிக்க விரும்பிய கருத் திற்கு, அவர்கள் ஏற்கனவே அறிந்திருந்ததை அடிப்படையாக வைத்தார். அவர், "அறியாமலிருக்கிறீர்களா" என்று கூறினார் (வசனம் 1இ). 1:13லிருந்து பவுல் தமது வாசகர்களை "சகோதரர்கள்" என்று குறிப்பிட்டிருக்கவில்லை, ஆனால் நமது வேதபாடப்பகுதியில் அவர் இருமுறை இவ்வாறு குறிப்பிட்டார் (7:1, 4). ஒருவேளை அவர் 7ம் அதிகாரத்தின் முக்கியமான விஷயங்களை

*அணுகுகையில், ரோமாபுரியில் இருந்தவர்களுடனான தமது இணைப்பை உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பியிருக்கலாம்.*

*பவுல் தாம் வெளிப்படுத்தவிருந்த கொள்கையைத் தமது சகோதரர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நம்பிக்கையாயிருந்தார்: "நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன்" (வசனம் 1அ). கிரேக்க வசனத்தில் இங்கு "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்கு முன்னதாகத் திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவுமிருப்பதில்லை. லேரி டியசன் என்பவரின் கூற்றுப்படி, 7ம் அதிகாரத்தில் பவுல், "மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றிக் குறிப்பாக (ஆனால் அதை மாத்திரம் என்றிராத வகையில்)"[3] பேசினார் (வசனம் 7ஐக் காணவும்). 1ம் வசனத்தின் கொள்கையானது மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றிய உண்மையாக இருக்கலாம், ஆனால் அது பொதுவான பிரமாணத்தைப் பற்றியும் உண்மையாக இருந்தது.*

*என்ன கொள்கை? "ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறது" (வசனம் 1ஆ). 6ம் அதிகாரத்தில் பவுல், மரணம் என்பது சட்டப்பூர்வமான கடமைப்பொறுப்புகளை நீக்கிவிடுகிறது என்று விவாதித்தார் (6:7ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இப்போது அவர் அந்த சத்தியத்தை மறுபடியும் வலியுறுத்தினார். சட்டப்பூர்வமான இந்த மூதுரையானது "உலகளாவிய வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அறைகூவல் விடுக்கப்பட இயலாததாகவும்"[4] எப்போதுமே இருந்துள்ளது. இந்தக் கொள்கையின்மீது பவுல் எத்தனை விவரிப்புகளை வேண்டுமானாலும் பயன்படுத்தியிருக்க முடியும்: மரித்துப்போன ஒரு மனிதர் வரிகளைக் கட்டத் தேவையில்லை; மரித்துப்போன ஒரு மனிதர், தாம் செய்துள்ள குற்றங்களுக்கு விசாரணைக்காக நிற்கத் தேவையில்லை.[5] இருப்பினும், பவுல் தமது நோக்கத்திற்கு மிகச்சிறப்பாகப் பொருந்தக்கூடிய அன்றாட விவரிப்பு ஒன்றைத் தேர்ந்துகொண்டார்: திருமணம்.*

### ஒருவிவரிப்பு (வசனங்கள் 2, 3)

*2ம் வசனம், "அதெப்படியென்றால்" (gar) என்று தொடங்குகிறது, இது "அதற்கான காரணத்தைக் காண்பித்தல்" என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. பல மொழிபெயர்ப்புகளில் இது* "for example" (NIV; REB; Phillips) *அல்லது* "for instance" (JB; AB) *என்றுள்ளது. பவுல், "[உதாரணமாக] புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்" என்று கூறினார் (வசனம் 2).*

*"புருஷனைப் பற்றிய நியாயப்பிரமாணம்" (நேரடி அர்த்தத்தில், "புருஷனுடைய நிபந்தனை") என்பது மனைவியைக் கணவருடன் கட்டின பிரமாணத்தைப்பற்றி மாத்திரம் குறிப்பிடுகிறது. அநேகமாகப் பவுல், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் காணப்பட்ட கட்டளைகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்திருக்கலாம், ஆனால் அநேக சமுதாயங்கள் திருமணத்தைப் பற்றிய சட்டங்களைக் கொண்டிருந்தன. அந்தப் பிரமாணங்கள், ஒரு மனைவியை அவளது கணவருடன், அவர் உயிரோடிருக்கும் வரையில் கட்டியிருந்தன, ஆனால் அவர் மரித்துவிட்டால் அவள் இனியும் கட்டப்பட்டிருப்ப*

தில்லை. இயேசுவின் கூற்றுப்படி இந்த வாழ்விற்குப் பின்பு, "கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை" (மத்தேயு 22:30).

3ம் வசனத்தில் பவுல் தமது விவரிப்பை விரிவாக்கி, "ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை *விவாகம்பண்ணினால்* விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை *விவாகம் பண்ணினாலும்* விபசாரியல்ல" என்று கூறினார். [தமிழ் வேதாகமத்தில் இவ்வசனத்தில், "வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால்" என்றுள்ள இடத்தில் ஆங்கில வேதாகமத்தில் "*joined* to another man" என்றுள்ளது] "joined" என்பதற்குரிய கிரேக்க வார்த்தை *ginomai* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது, இந்த வார்த்தை, அடிப்படையில் "ஆகுதல்" என்று அர்த்தப்படுகிற பல்நோக்குக் கிரேக்க வார்த்தையாகும்.[6] இந்த சந்தர்ப்பப்பொருளில், இது "ஒரு மனிதரின் மனைவி யாகுதல்" (அதாவது "விவாகம்பண்ணுதல்") என்று அர்த்தப்படுகிறது.

"Joined to" அல்லது "married" என்பதற்குப் பதிலாகச் சில மொழி பெயர்ப்புகளில் "live with" அல்லது "gave herself to" என்றுள்ளது (இவை "பாலுறவு கொண்டிருத்தல்" என்பதற்கான நயமான உரைக்கூற்றுகளாக உள்ளன). இருப்பினும் இவ்வசனத்தின் கடைசிப்பகுதியில், ("joined" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள) *ginomai* என்ற வார்த்தையின் பயன்பாட்டைக் கவனியுங்கள். லியோன் மோரிஸ் என்பவர், NIV வேதாகமத்தில் "marry" என்றுள்ளது என்று குறிப்பிட்டார், மற்றும் அவர், பவுல் "to marry" என்பதற்கான சாதாரண வினைச்சொல்லாகப் பயன்படுத்தியிராவிட்டாலும், இவ்விடத்தில் அதுவே கருத்துணர்வாக உள்ளது" என்று குறிப்பிட்டார்.[7] மீண்டுமாக, ஒரு பெண் தனது கணவர் உயிரோடிருக்குமளவும் அவருடன் கட்டப்பட்டிருக்கிறாள், ஆனால் அவர் மரித்துவிட்டால், அவள் மறுதிருமணம் செய்துகொள்ள விடுதலை யாக இருக்கிறாள் என்பதே பவுலின் கருத்தாக இருந்தது.

**ஒரு நடைமுறைப் பயன்பாடு (வசனம் 4)**

ஒப்புவமையைக் கட்டியெழுப்ப - மரணத்தின் மூலமாகப் பாவிகள் ஒரு புதிய கணவரைத் திருமணம் செய்துகொள்ள விடுதலையாக்கப்பட்டிருந்தனர் என்ற கருத்தைக் கட்டியெழுப்ப - பவுல் தயாராக இருந்தார், ஆனால் அவர் நாம் எதிர்பார்க்கும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தவில்லை. அவரது விவரிப்பில், *கணவர்* மரித்தவராக இருக்கிறார், ஆனால் அவரது விவரிப்பில் *மனைவி* மரித்தவளாக இருக்கிறாள்.[8] இருப்பினும், இது பாவத்திற்குக் *கிறிஸ்தவர் மரித்தல்* (ரோமர் 6:2, 7, 8, 11) என்ற அவரது முந்திய வலியுறுத்தலைக் காத்துக்கொள்வதாக உள்ளது. உருவகத்தில் ஒரு மாறுதலிருப்பினும்,[9] கருத்து அதேவிதமாக நிலைத்துள்ளது: மரணம் என்பது ஒருவர் மறுதிருமணம் செய்துகொள்ள விடுதலையாகியிருக்கும்படிக்கு திருமண பந்தங்களைத் தீர்த்துவைக்கிறது.

"அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" என்று பவுல் கூறினார் (7:4). கிரேக்க வசனத்தில் "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்கு முன்னதாகத் திட்டவட்டச் சுட்டுச்சொல் ஒன்றுள்ளது, எனவே

NASB (மற்றும் பெரும்பான்மையான மொழிபெயர்ப்பு) வேதாகமங்கள் "Law" என்ற வார்த்தையில் பெரிய "L" எழுத்தை இடுகின்றன, இது பவுல் தமது சிந்தையில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கிறது.

விளக்கவுரையாளர்கள் சிலவேளைகளில், யூதர்கள் நியாயப்பிரமாணத்துடன் அல்ல, ஆனால் தேவனுடன் "திருமணம்" செய்விக்கப்பட்டிருந்தனர் (எரேமியா 31:32ஐக் காணவும்), மற்றும் நியாயப்பிரமாணம் என்பது "திருமண ஒப்பந்தத்தின்" பாகமாக மாத்திரம் இருந்தது என்றுகூறி இந்தக் கருத்தை மறுக்கின்றனர். இது உண்மையானதாகவே உள்ளது, ஆனால் யூதர்கள், நியாயப்பிரமாணத்துடன் தாங்கள் திருமணம் *செய்விக்கப்பட்டிருந்தது போல* அதை அவ்வளவாக மேன்மைப்படுத்தியிருந்தனர். நிச்சயமாகவே, அவர்கள் அதனுடன் "கட்டப்பட்டிருந்தனர்" (ரோமர் 7:6ஐக் காணவும்). இப்போது, பவுல் அவர்கள் "கிறிஸ்துவின் சரீரத்தினாலே" அந்த உறவினின்று விடுதலையாக்கப்பட்டிருந்தனர் என்று கூறினார் (7:4ஆ).

"கிறிஸ்துவின் சரீரத்தினாலே" என்பது நாம் ஆவிக்குரிய விடுதலையை எவ்வாறு பெறுகிறோம் என்பதை வெளிப்படுத்தும், வழக்கத்திற்கு மாறான ஒரு வழியாக உள்ளது. கிறிஸ்துவின் சபையானது அவரது சரீரம் என்று அழைக்கப்படுவதால் (எபேசியர் 1:22, 23; கொலோசெயர் 1:18; 1 கொரிந்தியர் 12:27ஐக் காணவும்), இவ்விடத்தில் பவுல் நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் அமைவில் உறுப்பினர்களாவதைக் குறிப்பிடுகிறார் என்று சிலர் நினைக்கின்றனர். எடுத்துக்காட்டாக, ரோமர் 7:4ல், CEV மற்றும் TEV வேதாகமங்கள், கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பாகமாக" இருக்கின்றனர் என்று குறிப்பிடுகின்றன. இருப்பினும், பவுல் அநேகமாக, சிலுவையில் ஆணியறையப்பட்ட "கிறிஸ்துவின் சரீரத்தை" இங்கு குறிப்பிட்டிருக்கலாம். AB வேதாகமத்தில், ["You have undergone death ... through the [crucified] body of Christ"] "நீங்கள் [சிலுவையில் அறையப்பட்ட] கிறிஸ்துவின் சரீரத்தின் மூலமாக ... மரணத்திற்குள் சென்றிருக்கிறீர்கள்" என்றுள்ளது. எபேசியர் 2:15ல் பவுல், கிறிஸ்து "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே" ஒழித்தார் என்று கூறினார்.

ரோமர் 7:4ல், NEB வேதாகமத்தில் "You ... have died to the law by becoming identified with the body of Christ" ["நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தைக் கொண்டு உங்களை அடையாளப்படுத்தியதன்மூலம் நியாயப்பிரமாணத்திற்கு மரித்திருக்கிறீர்கள்"] என்றுள்ளது. நாம் ஞானஸ்நானம் பெற்றபோது, நாம் "கிறிஸ்துவின் சரீரத்தைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டோம்." இவ்வாறாக, மோரீஸ் என்பவர், "கிறிஸ்துவின் சரீரத்தினாலே" என்ற சொற்றொடர், 6ம் அதிகாரத்தில் பவுல் வலியுறுத்திய, 'அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்', 'அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டோம்' (ரோமர் 6:4, 5) என்ற சத்தியத்தை பற்றிக் குறிப்பதாக உள்ளது என்று கருத்துத் தெரிவித்தார்.[10] வில்லியம் பார்க்ளே என்பவர், "ஞானஸ்நானத்தினாலே நாம் கிறிஸ்துவின் மரணத்தில் பங்குபெறுகிறோம்" என்று எளிமையாக எழுதினார்.[11]

நமது வேதபாடப் பகுதியைத் தொடருகையில் நாம், "கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாக்கப்பட்டோம்"

என்று காணுகிறோம் (வசனம் 4இ). நாம் ஏன் "நியாயப்பிரமாணத் திற்கு மரித்தவர்களாக்கப்பட்டோம்"? "[நாம்] கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி" இருக்கும்படி அப்படியாக்கப்பட்டோம் (வசனம் 4அ). இவ்விடத்தில் பவுல், எஜமானர் மற்றும் அடிமை என்ற தமது உருவகத்தை மாற்றினார் என்று சிலர் நினைக்கின்றனர், ஆனால் 4ம் வசனத்தில் உள்ள "வேறொருவருடையவர்களாகி" என்பதற்கான வார்த்தையானது அடிப்படையில் 3ம் வசனத்தில், விவாகம் செய்விக்கப்படுதல் பற்றிக் குறிப்பிடும் அதே அர்த்தம் கொண்டதாக உள்ளது. ஆகவே, நான் இங்கு பவுல் திருமண உருவகத்தைத் தொடர்ந்து பயன்படுத்தினார் என்றே நம்புகிறேன் (KJV; McCord; SEB வேதாகமங்களில் காணவும்).

நாம் *யாரைத்* திருமணம் செய்துகொள்கிறோம்? "மரித்தோரிலிருந்து எழுந்த ஒருவரை" அதாவது, கிறிஸ்துவை (வசனம் 4அ). அன்பான ஒரு கணவன் மற்றும் மனைவி ஆகியோருக்கிடையில் நிலவும் உறவைவிட மனிதரீதியாக அதிகமான அன்பு வேறெதுவும் இருப்பதில்லை. கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்குமிடையில் நிலவும் உறவைக்காட்டிலும் அதிகமான ஆவிக்குரிய உறவு வேறெதுவும் இருப்ப தில்லை. இவ்வாறு, நாம் கிறிஸ்துவுடன் கொண்டுள்ள விசேஷித்த இணைவை - நாம் இயேசுவுடன் கொண்டுள்ள, புரிதலுக்கு அப்பாற்பட்ட, கீழ்ப்படிதலுள்ள, சிலாக்கியமான மற்றும் நெருக்கமான[12] இணைவை - பவுல் சித்தரித்தார்.

நாம் இந்த ஆச்சரியமான சத்தியத்தின் மறைகருத்துக்களைக் காணுமுன்பு, இது எவ்வளவு ஆச்சரியமானது என்று ஆழ்ந்து சிந்திக்க ஒரு கணப்பொழுதை எடுத்துக்கொள்வோம். முதலாவதாக, நியாயப்பிரமாணத்திற்குத் "திருமணம்" செய்விக்கப்பட்டிருத்தல் என்பது எதைப்போன்றிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். சமரசம் செய்துகொள்ளாத ஒரு முழுநிறைவுக் கொள்கையாளருக்குத் திருமணம் செய்விக்கப்பட்டுள்ள ஒரு இளம் மணமகளாக உங்களைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அவர் மோசமான மனிதரல்ல; ஆனால் அவர் தன்னில்தானே "பூரணப்பட்டவராக" இருக்கிறார், மற்றும் நீங்களும் பூரணப்பட்டவராக இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். ஒவ்வொரு நாளிலும் நீங்கள் செய்யவேண்டியவை என்ன என்பதை அவர் உங்களுக்காகப் பட்டியலிடுகிறார், மற்றும் அந்தப் பட்டியலிலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் செய்யத் தவறியமைக்குச் சாக்குப்போக்கு எதையும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை. அவர் தமது கேட்புகளில் பரிவிரக்கம் அற்றவராகவும் கருணையற்றவராகவும் இருக்கிறார், அவர் ஒருக்காலும் உதவியளிப்பதில்லை (கலாத்தியர் 3:10ஐக் காணவும்). அப்படிப்பட்ட மனிதருடன் திருமணம் செய்விக்கப்பட்டிருத்தல் பற்றி நீங்கள் மகிழ்ச்சியடைவீர்களா அல்லது ஒவ்வொரு புதிய நாளையும் எதிர்கொள்ளுதல் என்பது உங்களுக்குக் கடின மாக இருக்குமா? நியாயப்பிரமாணத்துடன் "திருமணம் செய்விக்கப்பட்டிருத்தல்" என்பது அதுபோன்றதாகவே உள்ளது. அது அதிகாரத்துடன் கேட்டது; அது தவறை வெளிப்படுத்திக் கண்டனம்பண்ணினது; ஆனால் அது நிரந்தரமான நிம்மதியை, உண்மையான நம்பிக்கையை அளிப்பதில்லை.

இப்போது, கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருத்தல் என்பது எதைப்போன்றிருக்கும்? கிறிஸ்து பூரணப்பட்டவராக இருப்பதில்லையா? ஆம், அவர் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் எல்லையற்ற வகையில் அதிகம் பூரணப்பட்டவராக இருக்கிறார் (எபிரெயர் 4:15; 9:14 ஆகிய வசனங்களைக்

காணவும்). நியாயப்பிரமாணம் கேட்டுக்கொண்டவற்றில் அதிகமானவற்றைக் கிறிஸ்து நம்மிடத்தில் கேட்பதில்லையா? ஆம், அதைவிட அதிகமானவற்றையும் அவர் கேட்கிறார் (மத்தேயு 5:27, 28; எபேசியர் 5:27 ஆகிய வசனங்களைக் காணவும்). பின்பு வேறுபாடு என்ன? கர்த்தர் நம்மீது *அன்புகூருகிறார்,* உண்மையிலேயே அவர் நம்மீது அன்புகூருகிறார் என்பதே வேறுபாடாக உள்ளது; அவர் நமக்காக மரிக்கும் அளவுக்கு நம்மீது அன்புகூருகிறார் (எபேசியர் 5:25). அவரது அன்பின் காரணமாக, அவர் *நம்மால் செய்ய இயலாதவற்றை நமக்காகத் தாமே செய்கிறார்.* எனது சிந்தையில், நான் ஒரு இளம் தாய் தான் செய்ய வேண்டிய எல்லாவற்றினாலும் இளைப்படைந்திருப்பதைக் காணுகிறேன், அவள் ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு நேரத்தையோ அல்லது சக்தியையோ கண்டறிய முடிவதில்லை. பின்பு நான் அவள்மீது அன்புசெலுத்தும் அவளது கணவர், அவள்மீது தமது கைகளை வளைத்துப்போட்டு, "நான் சற்றுநேரம் குழந்தையைக் கவனித்துக் கொள்கிறேன். நான் இரவு உணவைச் சமைத்து, துணிகளைத் துவைத்துப் போடுகிறேன். நீ ஓய்வெடுத்துக்கொள்" என்று கூறுவதைக் காணுகிறேன். ஆம், எனது விவரிப்பு பூரணத்தன்மையிலிருந்து தொலைவில் உள்ளது என்பதை நான் அறிந்திருக்கிறேன்; ஆனால் நாம் நம்மீது அன்புகூருகிற, நம்மை பராமரிக்கிற, நம்மீது பரிவிரக்கம் கொண்டுள்ள ஒரு கணவரைக் கொண்டுள்ளோம் என்ற கருத்தைத் தெரியப்படுத்தமட்டும் முயற்சி செய்கிறேன்: அந்தக் கணவர் இயேசு கிறிஸ்துவே!

## உறுதிப்பாடு உள்ளவராக இருங்கள் (7:2-4)

இந்தச் சத்தியத்தைச் சிந்தையில் காத்துக்கொண்ட நிலையில் நாம் ஆவிக்குரிய வகையில் புதிதாகத் திருமணம் செய்துகொண்டுள்ள நிலையின் தேவைகள் பற்றிய மற்ற பாடங்கள் என்ன என்பதைக் கண்ணோக்குவோமாக. இப்போது எடுத்துரைத்து முடிக்கப்பட்ட வேதபாடப்பகுதியைப் பின்னோக்கி நாம் கண்ணோக்குகையில், குறைந்தபட்சம் இன்னும் மூன்று முக்கிய கொள்கைகளை நாம் காணுகிறோம். *நமது கணவருக்கு நாம் உறுதிப்பாடு உள்ளவர்களாக இருக்க வேண்டும்* என்பது அவற்றில் முதலாவதாகும்.

ரோமர் 7:1-6ல், திருமணத்தின்மீது விவரமான அறிவுறுத்துதல்களைக் கொடுத்தல் என்பது பவுலின் நோக்கமாக இருக்கவில்லை, ஆனால் அவரது வார்த்தைகளிலிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது: திருமணம் என்பது *வாழ்நாள் காலம் முழுவதற்குமானது* என்று அவர் நம்பினார். "அப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; ... ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்" (வசனம் 2அ, 3அ). கிறிஸ்துவை, "மரித்தோரிலிருந்து எழுந்த[வர்]" என்று குறிப்பிட்டதில் (வசனம் 4அ) பவுல், இயேசுவை அடையாளப்படுத்தியதோடு நின்றுவிடவில்லை என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக, அவர் 2 மற்றும் 3ம் வசனங்களில் உள்ள திருமணம் பற்றிய அவரது விவரிப்பில் காணப்படுவதுபோல, கணவரின் மரணத்தினால் நமது (ஆவிக்குரிய) திருமண உறவு முறிக்கப்படாது என்றும் வலியுறுத்தினார். கிறிஸ்து "இனி ஒருக்காலும் மரியாதிருக்கும்படி ... மரித்தோரில் இருந்து எழுந்தார்" (6:9).

திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானது. வேறொரு இடத்தில், கிறிஸ்து இந்தச் சட்டத்திற்கு ஒரு விதிவிலக்கைக் கொடுத்தார் (மத்தேயு 19:3-9ஐக் காணவும்),[13] ஆனால் பவுல் விதிவிலக்குகளைக் கையாண்டு கொண்டிருக்க வில்லை, அவர் [இவ்விடத்தில்] சட்டத்தைப் பற்றி மாத்திரம் அக்கறையுள்ளவராக இருந்தார்: *திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானது!* அமெரிக்காவில் திருமண வாக்குறுதிகள், "நாம் இருவரும் வாழும் காலம் முழுவதிலும்" அல்லது "மரணம் நம்மைப் பிரிக்குமளவும்" என்பது போன்ற வார்த்தைகளை அடிக்கடி கொண்டுள்ளன. இவைகள் "பாரம்பரியமானவைகளாக" இருப்பதால் உள்ளடக்கப்படவில்லை, ஆனால் அவை திருமணத்திற்குத் தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துவதால் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

மக்களில் சிலர் தங்களின் திருமண வாக்குறுதிகளை இலேசாக மதித்தல் என்பது கவலைக்குரியதாக உள்ளது - மற்றும், இன்னும் சிலர் கர்த்தருக்கு வாழ்நாள் முழுவதற்குமான உறுதிப்பாட்டை ஏற்படுத்தாமலேயே, கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கமாக இருத்தல் என்பது அதிகம் கவலைக்குரியதாக உள்ளது. இயேசு, "முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" என்று கூறினார் (மத்தேயு 10:22).

## உண்மை நிறைந்தவர்களாக இருங்கள் (7:3)

*நாம் நமது திருமணத் துணைவருக்கு/துணைவிக்கு உண்மை நிறைந்தவர் களாக இருக்க வேண்டியது அவசியம்* என்பது 7:1-4லிருந்து நாம் கற்றுக்கொள்ளும் இன்னொரு தெளிவான பாடமாகும்: "... புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்" (வசனம் 3அ). "என்னப்படுவாள்" என்ற சொற்றொடரானது, *வெளிப்படையாக அறியப்படுதல்* என்பதைக் குறிக்கிற *chrematizo* என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது.[14] பிலிப்ஸ் வேதாகமத்தில், "she incurs the stigma of adultery" ["அவள் தனக்குத்தானே, விபசார அவமதிப்பை வரவழைத்துக் கொள்கிறாள்"] என்றுள்ளது.

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் மக்களினம் யெகோவாவின் மணவாட்டி யாக இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது; ஆனால் அந்த மக்கள் தொடர்ந்து "அந்நியதேவர்களைப் பின்பற்றிச் சோரம் போனார்கள்" (நியாயாதிபதிகள் 2:17; 8:33ஐக் காணவும்; 1 நாளாகமம் 5:25). இவ்வாறு, இஸ்ரவேல் மக்கள் ஆவிக்குரிய விபசாரக்குற்றம் சாட்டப்பட்டனர் (எசேக்கியேல் 23:37ஐக் காணவும்). நீங்களும் நானும்கூட ஆவிக்குரிய விபசாரக்குற்றம் கொண்டவர் களாக இருக்கக்கூடும். எவ்வாறு? இயேசுவுக்குமுன் வேறு எதையேனும் - எந்த ஒன்றையேனும் - வைப்பதனால். யாக்கோபு, "[ஆவிக்குரிய] விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர் களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறேன் தேவ னுக்குப் பகைஞனாகிறான்" என்று எழுதினார் (யாக்கோபு 4:4). கிறிஸ்துதாமே, "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிக மாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல" என்று கூறினார் (மத்தேயு 10:37; 6:33ஐக் காணவும்).

திருமணம் முடித்த ஒரு ஆணோ அல்லது பெண்ணோ அவரது அல்லது

அவளது திருமணத்துணைவிக்கு/துணைவருக்கு உண்மையற்றுப் போவது என்பது இருதயத்தை உடைக்கக் கூடியதாக உள்ளது. கிறிஸ்துவின் மணவாட்டியின் உறுப்பினர்கள் இயேசுவுக்கு உண்மையற்றுப் போவது என்பது அதைவிட அதிகமாக இருதயத்தை உடைக்கக் கூடியதாக உள்ளது. நம் கர்த்தர் விரும்புகிற "பரிசுத்தமும் பிழையற்றதுமான" மணவாட்டியாக இருக்கப் பிரயாசப்படுவோமாக (எபேசியர் 5:27). சிமிர்னாவிலிருந்த சபைக்கு இயேசு, "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்று கூறினார் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10).

## கனிகொடுக்கிறவர்களாக இருங்கள் (7:4, 5)

ஆவிக்குரிய வகையில் புதிதாகத் திருமணம் செய்துகொண்டுள்ளவர்களுக்கு நாம் கண்டறியக்கூடிய வேறு பாடங்கள் என்ன? 4ம் வசனத்தில் பவுல், கிறிஸ்துவுடன் இணைக்கப்படுதல் (திருமணம் செய்விக்கப்படுதல்) என்பதே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தலின் *உடனடி* நோக்கமாக[15] இருந்தது என்று கூறினார். பின்பு அவர் *நிறைவான* நோக்கத்தைக் கொடுத்தார்: "தேவனுக்கென்று கனி [*karpophoreo*] கொடுக்கும்படி" (வசனம் 4ஆ). நீண்டகாலத்திற்கு முன்னர் தேவன், ஆதாம் மற்றும் ஏவாளிடம், "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி" என்று கூறியிருந்தார் (ஆதியாகமம் 1:28). குழந்தைகளைப் பெறுதல் என்பது திருமணத்திற்கான தேவனுடைய நோக்கங்களில் ஒன்றாக உள்ளது. ஆவிக்குரிய திருமணத்திலும் அது போன்றுள்ளது, *நாம் அவருக்கு "கனி கொடுப்பவர்களாக" இருக்க வேண்டும்* (யோவான் 15:1, 2 ஆகிய வசனங்களைக் காணவும்).

**என்ன?**

நாம் கொடுக்க வேண்டிய இந்தக் "கனி" என்பது என்னவாக உள்ளது? ஒப்புவமையை வலியுறுத்தி, சுவிசேஷ ஊழியத்தைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று முடிவு செய்யும்படி சோதிக்கப்படுதல் உள்ளது. கணவரும் மனைவியும் வழக்கமாகக் குழந்தைகளைப் பெறுவது போன்று, நாமும் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளை" உண்டாக்க வேண்டும் (1 கொரிந்தியர் 3:1ஐக் காணவும்). "ஆரஞ்சு மரம் ஆரஞ்சுக் கனிகளையே கொடுக்கும், ஆப்பிள் மரம் ஆப்பிள் கனிகளையே கொடுக்கும். அதுபோன்றே, கிறிஸ்தவருடைய கனி இன்னொரு கிறிஸ்தவராகவே இருப்பார்" என்று கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், சந்தர்ப்பப்பொருளில், நாம் இன்னும் விரிவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த வேண்டும். 6ம் அதிகாரம்பற்றிய நமது படிப்பில், *karpos* ("கனி") என்பது (6:21, 22ல் "பலன்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தது), பொதுவான கருத்துணர்வில் பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டோம். 7ம் அதிகாரத்தில், 4ம் வசனத்தின் "கனி" என்பது 5ம் வசனத்தின் "மரணத்தின் பலன்" என்பதுடன் நேரெதிராக உள்ளது. இவ்வாறு நாம் அநேகமாக, 4ம் வசனத்தின் "கனி" என்பது, "நீதியின் கனி" அல்லது அதைப்போன்ற சிலவிஷயம் என்று நினைக்கலாம் (பிலிப்பியர் 1:11ஐக் காணவும்).

நாம் இவ்வகையான கனியை எவ்வாறு கொடுக்கிறோம்? முதலாவது, சரியான *எண்ணப்போக்கைக்* கொண்டிருப்பதால்.[16] நாம் கொண்டிருக்க வேண்டிய எண்ணப்போக்குகள் பற்றிப் பவுல், "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,

சாந்தம், இச்சையடக்கம்" என்று எழுதினார் (கலாத்தியர் 5:22, 23). பின்பு நாம் சரியான *செயல்பாடுகளைக்* கொண்டிருத்தல் அவசியமாகிறது. பவுல் கொலோசெயிலிருந்த சகோதரர்களுக்கு, "சகலவித நற்கிரியைகளுமாகிய *கனிகளைத் தந்து,* தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்" என்று அறைகூவல் விடுத்தார் (கொலோசெயர் 1:10).

இது சுவிசேஷ ஊழியத்தின் கருத்தை விலக்கிப்போடுகிறதா? இல்லை. 1ம் அதிகாரத்தில் பவுல்,ரோமாபுரியிலிருந்த மக்களின் "சில பலனை" அடையும் படிக்கு அங்கு பயணமாகிவரத் தாம் விரும்பியிருந்ததாகக் கூறினார் (1:13). அவ்வசனத்தில் பவுல் மனமாறியவர்களை ஆதாயப்படுத்துதலை மனதில் கொண்டிருந்தார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர்.[17] மற்றவர்களுக்குப் போதித்தலும் அவர்களை ஞானஸ்நானப்படுத்துதலும் (மத்தேயு 28:19) "கனிநிறைந்த" வாழ்வின் வலிவார்ந்த பகுதியாக உள்ளது. "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" தாம் வந்ததாக இயேசு கூறினார் (லூக்கா 19:10) மற்றும் நாம் "அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டியவர்களாக" இருக்கிறோம் (1 பேதுரு 2:21).

**ஏன்?**

நாம் தேவனுக்கென்று "கனி கொடுத்தல்" ஏன் முக்கியமாக உள்ளது? ஏனென்றால், அப்படிப்பட்ட விஷயமானது, நாம் கிறிஸ்துவுடன் திருமணம் செய்விக்கப்பட்டிருத்தலுக்கு முன்பு சாத்தியமற்றதாக உள்ளது. "நாம் மாம்சத் திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது" (வசனம் 5). இங்கு, "மாம்சத்திற்கு" என்பது "சரீரத்திற்குள்" என்று அர்த்தம்தர இயலாது, ஏனெனில் பவுல் யாருக்கு இதை எழுதினாரோ, அவர்கள் இன்னமும் தங்கள் சரீரங்களில் இருந்தனர் - ஆனால் அவர்கள் இனியும் தங்கள் "மாம்சத்திற்கு உட்பட்டிருக்கவில்லை." "மாம்சம்" என்ற சொற்றொடர் பிற்பாடு விளக்கியுரைக்கப்படும். இப்போதைக்கு, இது கிறிஸ்துவற்ற நிலையில் அவர்களுடைய முன்னாளைய ஆவிக்குரிய சூழ்நிலையைக் குறிப்பதாக நினைத்தல் போதுமானது.

அவர்கள் அப்படிப்பட்ட பரிதபிக்கப்படத்தக்க நிலையிலிருந்தபோது, "நியாயப்பிரமாணத்தினாலே ... பாவ இச்சைகள் [தோன்றின]" (வசனம் 5அ). நியாயப்பிரமாணம் "பாவ இச்சைகளை" தோற்றுவித்ததா? அது எவ்வாறு நடந்திருக்கக்கூடும்? இதை நாம் அடுத்த பாடத்தில் இன்னும் முழுமை யாகக் கலந்துரையாடுவோம். இவ்விடத்தில் நான் நம்மில் பலர் - ஒருவேளை நம்மில் பெரும்பான்மையானவர்கள் - கலகம்செய்யும் விருப்பநோக்கம் கொண்டுள்ளோம் என்று மாத்திரம் குறிப்பிடுவேன். நாம் கட்டளைகளை மறுக்கச் சாய்கிறோம். இவ்வாறு, நியாயப்பிரமாணமானது, "செய்யாதிருப்பா யாக" என்று கூறியபோது, இச்சையுடன் கலகம் செய்யும் மாம்சமானது, செயல் விளைவில், "நான் எதைச் செய்ய வேண்டும் என்று நீ *எனக்குக் கூற* முடியாது!" என்று கூறிற்று - இதனால் பாவம் விளைந்தது.

இதை உங்கள் மனதின் பின்பகுதியில் வைத்துக்கொண்டு, 5ம் வசனத்தை முழுமையாகக் கண்ணோக்கவும். இவ்வசனத்தில் பவுலின் உருவகமானது,

மாம்ச இச்சைகளினுடைய பின்விளைவுகளின் அடிப்படையிலிருந்தது என்று நான் நம்புகிறேன். (இதேபோன்ற உருவகம் ஒன்றிற்கு யாக்கோபு 1:14, 15ஐக் காணவும்.) ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் இச்சைகளைக் கட்டுப்படுத்தத் தவறுகிறபோது, பாவம் (வேசித்தனம்) சிலவேளைகளில் பின்தொடருகிறது. விருப்பமற்ற கர்ப்பம் என்பது இதன் ஒரு விளைவாயிருக்கக்கூடும். அதுபோன்றே, நாம் "மாம்சத்திற்கு உட்பட்டவர்களாக" இருந்தபோது, நமது பாவ இச்சைகள் எழுப்பப்பட்டன மற்றும் நாம் பாவம் செய்தோம். பின்பு, ஒரு குழந்தையானது ஒரு பெண் வயிற்றில் வளருவது போன்று, இந்தப் பொல்லாத இச்சைகள் நமது மாம்சங்களில் செயல்பட்டன (ரோமர் 7:5இ; REB; JB வேதாகமங்களில் காணவும்). நாம் ஜீவனைப் பிறப்பிப்பதற்குப் பதிலாக "மரணத்தை" பிறப்பித்தோம் (வசனம் 5ஆ). யூஜீன் பீட்டர்ஸன் என்பவர், "In the end, all we had to show for it was miscarriages and stillbirths" ("முடிவில் நாம் கருச்சிதைவுகளையும் இறந்தே பிறத்தல்களையுமே காண்பிக்க வேண்டியிருந்தது") என்று எழுதினார் (MSG வேதாகமம்).

சிலர், பவுல் திருமணம் பற்றிய இந்த ஒப்பீடு ஒருக்காலும் அவ்வளவு தூரம் எடுத்துச்செல்லப்படும் நோக்கம் கொண்டிருந்தது இல்லை என்று கூறி மறுக்கலாம். விஷயம் அதுவாகவே இருப்பினும், நாம் பின்வருவதை ஒப்புக்கொள்ள முடியும்: நாம் கிறிஸ்தவராவதற்கு முன்பு, நாம் "தேவனுக்கென்று கனிதர" முடியாத, ஆனால் "மரணத்திற்கு ஏதுவான கனிகளை" மாத்திரம் கொடுக்கக்கூடிய நிலையில் இருந்தோம் என்று பவுல் கூறினார்.

அது என்னை, 4ம் வசனத்தின் கடைசிப்பகுதி, மற்றும் 5ம் வசனம் முழுமையும் பற்றி நான் ஏற்படுத்த விரும்பும் நடைமுறைப் பயன்பாட்டிற்கு என்னைக் கொண்டுவருகிறது: நாம் கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருப்பதால், நாம் *கனிநிறைந்தவர்களாக* மற்றும் "தேவனுக்கென்று கனிகொடுப்பவர்களாக" இருக்க வேண்டும். இயேசு, "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்" என்று கூறினார் (யோவான் 15:8அ); "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துபோடுகிறார்" (யோவான் 15:2அ) என்று கூறினார். ஜான் மெக்ஆர்தர் என்பவர், "கனியற்ற கிறிஸ்தவர் ஒருவர் உண்மைக் கிறிஸ்தவராக இருப்பதில்லை" என்று வலியுறுத்தினார்.[18]

4ம் வசனத்தில் பவுல் முன்னிலையிலிருந்து ("நீங்கள்") தன்மைக்கு ("நாம்") திடீரென்று நடுவாக்கியத்தில் மாறியதைக் கவனியுங்கள்: [இவ்வசனத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வேறுபாடுள்ளது: "Therefore, my brethren, you also were made to die to the Law through the body of Christ, so that *you* might be joined to another, to Him who was raised from the dead, in order that *we* might bear fruit for God" என்று ஆங்கில மொழியிலும், "அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" என்று தமிழ் மொழியிலும் உள்ளது.] தன்மைப் பெயரின் பயன்பாடு 5ம் வசனத்தில் தொடருகிறது: "நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் ... பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது." ஒருவேளை பவுல், தமது சொந்த மனமாற்றம் பற்றித் திடீரென்று நினைத்

*திருக்கலாம். அவர் நியாயப்பிரமாணத்திற்கு "கட்டப்பட்டிருந்த"போது (வசனம் 6), அவர் தேவனுக்கென்று கனிகொடுப்பதாக நினைத்துக்கொண்டிருந்தார் (நடபடிகள் 26:9ஐக் காணவும்). அவருக்குக் கிறிஸ்து தரிசனமானபோது, தாம் மரணத்திற்கு ஏதுவான கனிகளை மாத்திரமே கொடுத்துக்கொண்டு இருந்ததை அவர் உணர்ந்தறிந்தார். இருப்பினும், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உடலின் மூலமாக அவர் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டார் - மற்றும் அதன்பின்பு அவர் தமது அன்பார்ந்த கர்த்தருக்கென்று கனிகொடுக்க முடிந்தது!*

## *உதவிசெய்கிறவர்களாக இருங்கள் (7:6)*

*பவுலின் வாசகர்கள் ஒருகாலத்தில் பாவத்திற்கு அடிமைகளாக இருந்தனர் (6:17அ); "ஆனால் இப்பொழுதோ நாம் ..., புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார் (வசனங்கள் 7:6). "ஊழியம்" என்பது "அடிமை" என்று அர்த்தப்படும் doulos என்ற வார்த்தையின் வினை வடிவமான douleuo என்பதிலிருந்து வந்திருப்பதால், திருமணம் பற்றிய தமது ஒப்புவமையிலிருந்து பவுல் திரும்பி 6:16-23ன் அடிமைத்தன ஒப்புவமைக்குத் திரும்பினார் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். 7:6ல் ஒன்றின்மீது இன்னொன்று கவிந்துகிடக்கும் உருவகங்கள் சில இருக்கலாம், ஆனால் பவுல் இதற்கு முன்பு தாம் பயன்படுத்திய அதே சொற்றொடரை இன்னமும் பயன்படுத்திக் கொண்டிருந்தார். 4ம் வசனத்தில், நாம் "நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களானோம்" என்று அவர் கூறினார். இப்போது 6ம் வசனத்தில், "நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி" என்று அவர் கூறினார். பவுல் திருமணம் பற்றிய தமது ஒப்புவமையைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார் என்று நான் நம்புகிறேன்.*

*ஆதியிலே தேவன், "மனுஷனுக்கு ஏற்ற துணையாக இருப்பதற்காக" பெண்ணைப் படைத்தார் (ஆதியாகமம் 2:18). கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில் நாம், அவருக்கு* உதவியாக இருக்கக் *கற்றுக்கொள்ள வேண்டும். ரோமர் 7:6ன் சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துவதென்றால், நாம் அவருக்கு* ஊழியம் செய்ய *வேண்டும். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? அது நாம் அவரது சித்தம் என்னவாக இருந்தாலும் அதை நிறைவேற்ற எப்போதும் தயாராக இருத்தல் என்று அர்த்தப்படுகிறது.*[19] *2ம் வசனத்தில் "புருஷனையுடைய ஸ்திரீ" என்ற சொற்றொடரில் "புருஷனையுடைய" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே வருகிறது: hupandros, இது "மனிதனின் [andros இது aner என்பதிலிருந்து வருகிறது] கீழ் [hupo]" என்று அர்த்தப்படும் கூட்டுவார்த்தையாக உள்ளது. கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில் நாம் அவரின் "கீழ்" இருக்கிறோம். எபேசியர் 5ல் உள்ள, திருமணம் பற்றிய மிகச்சரியான ஒப்புவமையில், கிறிஸ்து "சபைக்குத் தலையாயிருக்கிறார்" என்றும் சபையானது "கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்றும் பவுல் எழுதினார் (வசனங்கள் 23, 24).*

*கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் நமது எண்ணப்போக்கு எப்படி இருக்க*

வேண்டும்? நாம் அவருக்கு ஊழியம் செய்வதில் மனக்கசப்புடன் இருக்க வேண்டுமா? அவர் நமக்காகச் செய்துள்ளவற்றைப் புரிந்துகொண்டிருந்தால் நாம் அவ்வாறு இருக்க மாட்டோம். அவர் *நமக்கு* மிகப்பல வழிகளில் ஊழியம் செய்திருக்கிறார்! நாம் அவருக்கு ஊழியம் செய்யும்போது, நாம் குறைந்தபட்சமானவற்றைத் தரவேண்டுமா? நாம் அவரை அன்பு செய்தால் அப்படி இருக்கமாட்டோம். *அன்பு* என்பது நியாயப்பிரமாணத்தை எப்போதும் காத்துக்கொள்ளுதல் என்பதைக் காட்டிலும் கர்த்தருக்கு *அதிகமானவற்றைச்* செய்யும்படி நம்மைத் தூண்டும்! அது நம்மை ஒரு நிறைவான கருத்திற்குக் கொண்டுவருகிறது.

## அன்புள்ளவர்களாக இருங்கள் (7:6)

தயக்கமுள்ள ஒரு அடிமை தனது எஜமானருக்கு ஊழியம் செய்வது போலின்றி, ஒரு அன்பான மனைவி தனது கணவரைப் பிரியப்படுத்த முயற்சி செய்வது போன்று நாம் கிறிஸ்துவைப் பிரியப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பவுல், "இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல [*gramma* என்பதிலிருந்து வந்துள்ளது], புதுமையான ஆவியின்படி [*pneuma* என்பதிலிருந்து வந்துள்ளது] ஊழியஞ்செய்யத்தக்கதாக" என்று கூறினார் (7:6அ, ஆ). இவ்வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்துகின்றன என்று நாம் கலந்துரையாடுவதற்கு முன்பு, அவைகள் எதை அர்த்தப்படுத்துவதில்லை என்பதை நாம் குறிப்பிடுவோமாக. சில வேளைகளில் மக்கள், "நியாயப்பிரமாணத்தின் ஆவி" மற்றும் "நியாயப்பிரமாணத்தின் எழுத்து" என்பவற்றைக் குறிப்பிடுகின்றனர். சிலர், "நியாயப்பிரமாணத்தின் ஆவியே முக்கியத்துவமானதாக உள்ளது, எழுத்து அல்ல" என்று உரிமைகோருதலை ஏற்படுத்துகின்றனர். ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்த வித்தியாசம், நியாயப்பிரமாணத்தின் 'எழுத்து' மற்றும் 'ஆவி' என்னப்பட்டவைகளுக்கு இடையிலானது*அல்ல*" என்று கூறினார்.[20] டக்ளஸ் J. மூ என்பவர் பின்வருமாறு ஒப்புக்கொண்டார்: "பவுல், மொழிநடையின் இந்தப் பயன்பாட்டைத் தமது பயன்படுத்துதல் எவற்றிலாவது சிறிதளவே ஆதரவு கொடுத்துள்ளார் அல்லது ஆதரவு கொடுக்காது இருக்கிறார்" என்று கூறினார் (ரோமர் 2:29; 7:6; 2 கொரிந்தியர் 3:6-7).[21]

ரோமர் 7:6ல் இரண்டு நேர்மாறுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவது "புதுமையான" மற்றும் "பழமையான" - அல்லது CJB வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, "புதிய வழி" மற்றும் "பழைய வழி" - என்பவற்றிற்கு இடையிலானது ஆகும். இந்த வார்த்தைகளில் பழைய உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை ஆகியவற்றிற்கிடையில் ஒரு நேர்மாறைக் காணாதிருப்பது கடினமாகும் (எபிரெயர் 9:15; எரேமியா 31:31-34 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்).[22] பவுல், ஆவி/எழுத்து நேர்மாறை மூன்று முறைகள் பயன்படுத்தினார். இவற்றில் முதலாவது ரோமர் 2:29ல் உள்ளது, இதன் சந்தர்ப்பப்பொருள், "எழுத்து" என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது என்று சுட்டிக்காண்பிக்கிறது.[23] 2 கொரிந்தியர் 3:6ல், "எழுத்து" என்பது "கற்களில் பதிந்திருந்த எழுத்துக்களை [பத்துக்கட்டளைகளை] குறிப்பிடுகிறது (வசனம் 7). அதுபோலவே, ரோமர் 7:6ல் "எழுத்து" என்ற சொற்றொடர் மோசேயின் நியாயப்பிரமாணத்தையே முதன்மையாகக் குறிப்பிடுகிறது (வசனம்

7ஐக் காணவும்). பவுலின் புதுமையான/பழமையான நேர்மாறு, பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையிலானது என்று நாம் முடிவு செய்கிறோம்.

6ம் வசனத்தின் துவக்கத்தில், "ஆவி" மற்றும் "எழுத்து" ஆகியவற்றிற்கு இடையில் இரண்டாவது நேர்மாறு தரவழைக்கப்பட்டுள்ளது. தாமஸ் என்பவர், பவுல் இரு உடன்படிக்கைகளுக்கிடையில் நேர்மாறை மாத்திரம் அல்ல, ஆனால் "இரு உடன்படிக்கைகளுக்கிடையில் கொள்கைகளையும்" நேர்மாறாக ஒப்பிட்டார் என்று சுட்டிக்காண்பித்தார்.[24]

"ஆவி" என்பதற்குரிய ஆங்கில வார்த்தையான "Spirit" என்பதில் பெரிய "S" ஐப் போடுவதா அல்லது சிறிய "s" ஐப் போடுவதா என்பதில் வழக்க மான நிச்சயமற்றதன்மை உள்ளது. NASB வேதாகமத்திலும் மற்ற பல மொழி பெயர்ப்புகளிலும் "Spirit" என்றுள்ளது, ஆனால் சில மொழிபெயர்ப்புகளில் "spirit" என்றுள்ளது (KJV; NEB; SEB). நாம், பவுல் ஆவியானவரின் கிரியையை வலியுறுத்திய 8ம் அதிகாரத்தை நெருங்குகிறோம், எனவே "spirit" என்பதைக் காட்டிலும் "Spirit" என்பது அதிகம் விரும்பித் தேர்ந்துகொள்ளப்படக் கூடியதாக உள்ளது.[25] பவுல் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிட்டிருந்தால், அவர் ஊழியத் திற்கான ஒரு புதிய *உந்துதலை* மாத்திரமின்றி, மாபெரும் ஊழியத்திற்கான புதிய *வழியையும்*[26] முன்னெதிர் நோக்கியிருந்தார் (8:13, 26ஐக் காணவும்).

பவுல் தமது சிந்தையில், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டிருந்தாரா அல்லது மனித ஆவியைக் கொண்டிருந்தாரா என்பது அவரது வார்த்தையின் முதன்மை வலியுறுத்தங்களில் சிறிதளவே வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. "பழமையான எழுத்தின்படி" ஊழியம் செய்தல் என்பது ஒரு சட்ட/கிரியை முறைமையின் கீழ் நியாயப்படுத்தப்பட்டிருக்க முயற்சிசெய்தல் என்றே அர்த்தப்படுகிறது. அப்படிப்பட்ட முறைமையானது எழுதப்பட்ட சட்டத்தை வலியுறுத்துகிறது. அந்த சட்டத்தின் விதிகளுக்கும் முறைமைகளுக்கும் *பரிபூரணமாகக்* கீழ்ப்படிதல் என்பதே நியாயப்பிரமாணத்தின்கீழிருந்த இலக்காக உள்ளது. இது மனிதரால் இயலாத ஒரு செயலாக இருந்தது. "புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்தல்" (அல்லது "ஆவி புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருத்தல்") என்பது, நாம் கிருபை/ விசுவாசம் என்பதன் அடிப்படையில் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிதலினால் வருகிற சந்தோஷத்துடன் தேவனுடைய சித்தத்தைச் செய்தலாக உள்ளது. நாம் இன்னமும் ஊழியம் செய்கிறோம்; நாம் இன்னமும் தேவன் கட்டளையிட்டுள்ளவற்றை மனப்பூர்வமாகச் செய்வதற்குப் பிரயாசப்படுகிறோம் - ஆனால் இப்போது நாம் அதை பயத்தினிமித்தமல்ல, அன்பினிமித்தம் செய்கிறோம்.

இயேசுவுடன் நமது திருமண உறவு என்பதே நான் இப்பாடத்தில் ஏற்படுத்த விரும்பும் நடைமுறைப் பயன்பாடாக உள்ளது. திருமண உறவு என்பது விதிமுறைகளின் ஒரு அமைவிற்குக் கீழ்ப்படிதல் பற்றியதாக இருப்ப தில்லை. அது மக்களிருவர், ஒருவர் மற்றவரை அன்புகூர்ந்து ஒருவர் மற்றவரை மகிழ்ச்சிப்படுத்த முயற்சிசெய்தல் பற்றியதாக உள்ளது. தேவன் தங்களுக்கு அளித்திருக்கும் பணிப்பொறுப்புகள் பற்றி மகிழ்ச்சியற்றிருந்த ஒருசில திருமணத் தம்பதிகளை நான் அறிந்திருக்கிறேன். அவர்கள் பின்வருமாறு முணுமுணுப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்: "நாங்கள் தேர்ந்துகொள்ளுதல் எதையும் கொண்டிருப்பதில்லை, ஏனென்றால் வேதாகமம் இவ்வாறே போதிக்கிறது." கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டினால் அதிகம் கேட்புகள் சுமத்தப்படுவதால்

மகிழ்ச்சியற்றுப் போகிற அதிகமான கிறிஸ்தவர்கள் பற்றியும் நான் அறிந் திருக்கிறேன். அவர்களின் எண்ணப்போக்கு, “இது தேவனால் கட்டளையிடப் பட்டுள்ளதால் நாம் இவற்றைச் செய்ய வேண்டியதாக உள்ளது” என்றிருப்பதாகக் காணப்படுகிறது.

நம்மில் கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கமாக இருப்பவர்கள், “செய்யவேண்டும்” என்பதிலிருந்து “செய்ய விரும்பும்” மனநிலைக்குக் கடந்து செல்ல வேண்டும். நாம் வற்புறுத்தும் ஒரு துணைவரின் *கட்டளைகளுக்கு* முறுமுறுத்துக்கொண்டே மனச்சோர்வான நிலையில் கீழ்ப்படிதல் என்ற நிலையை விட்டுவிட்டு, அன்பார்ந்த ஒரு கணவரின் *விருப்பங்களைச்* சந்தோஷ மாக நிறைவேற்றும் உயர்மனநிலைக்குக் கடந்துசெல்ல வேண்டும். யோவான், “அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூரு கிறோம்” என்று கூறினார் (1 யோவான் 4:19). D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ஆனால் கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருத்தல் என்ற நிலையானது சுயாதீனமாக ஒப்புக்கொடுத்து சந்தோஷமாகக் கீழ்ப்படிகிற அன்பின் உறவாக உள்ளது. பவுலினால் *“பழமையான எழுத்தின்படி”* என்று விவரிக்கப்பட்டுள்ள முந்திய எண்ணப்போக்கு அடிக்கடி குளிரானதாகவும் மனக் கசப்புடையதாகவும் உள்ளது; *“புதுமையான ஆவி”* என்று அவர் அழைக்கிற பிந்திய எண்ணப்போக்கோ, புத்தம்புதிதாகவும் தானாகவே எழுவதாகவும் உள்ளது.[27]

## முடிவுரை

நாம் இப்பாடத்தை முடிக்கையில், மூன்று சத்தியங்களை முக்கியத்துவப் படுத்த நான் விரும்புகிறேன். முதலாவது, ஆவிக்குரிய வகையில் பேசுவ தென்றால், நீங்கள் யாரேனும் ஒருவருக்கு அல்லது ஏதேனும் ஒன்றிற்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருக்கிறீர்கள். உடல்ரீதியாகவோ அல்லது சட்டரீதியாகவோ, நீங்கள் திருமணம் முடித்த அல்லது திருமணம் முடிக்காத நிலையில் இருக்க முடியும், ஆனால் ஆவிக்குரிய நிலையில் அது உண்மை யாய் இருப்பதில்லை. நீங்கள் கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிரா திருந்தால், நீங்கள் வேறு ஏதேனும் ஒன்றுக்கு திருமணம் செய்விக்கப் பட்டு இருக்கிறீர்கள். உங்கள் “துணை” என்பது மனிதரால் ஏற்படுத்தப் பட்ட மதமுறைமையாக இருக்கலாம், உங்கள் சொந்த சுயநல மான விருப்பங்களாக இருக்கலாம் அல்லது வேறு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் - ஆனால் நீங்கள் கிறிஸ்துவைத் தவிர வேறு எதற்கோ திருமணம் செய்விக்கப்பட்டிருக்கிறீர்கள்.

கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டவர்களாக இருத்தல் மாத்திரமே நீங்கள் உண்மையான மற்றும் நீடித்த சந்தோஷத்தை அறியக்கூடிய ஒரே வழியாக உள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டப்படி, *சபையானது* கிறிஸ்துவின் மணவாட்டியாக உள்ளது, சபை என்பது இயேசுவின் இரத்தத்தி னால் மீட்கப்பட்ட மக்களின் அமைப்பாக உள்ளது (எபேசியர் 5:23, 25; நடபடிகள் 20:28). உங்கள் விசுவாசம் உங்களை அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படி வழிநடத்தும்போது நீங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால்

இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் (ரோமர் 6:3, 4, 17, 18). அந்தவேளையில், தேவன் உங்களை சபையில் சேர்த்துக்கொள்கிறார் (நடபடிகள் 2:36-38, 41, 47; 1 கொரிந்தியர் 12:13ஐக் காணவும்); நீங்கள் கிறிஸ்துவினுடைய மணவாட்டியின் அங்கமாகிறீர்கள். நீங்கள் ஞானஸ்நானம் பெறுவதன்மூலம் உங்கள் விசுவாசத்தை இன்னும் வெளிப்படுத்தியிராவிட்டால், உடனே அதைச் செய்யும்படி நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

மூன்றாவதாக (மற்றும் இது இப்பாடத்தின் பிரதான வலியுறுத்தமாகவும் உள்ளது), நீங்கள் கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டவுடனே, நீங்கள் அதைப்போன்று *செயல்பட வேண்டியது* அவசியமாக உள்ளது. நான் (பத்தொன்பது என்ற "மிகவும் இளம்" வயதில்) திருமணம் செய்துகொண்ட புதிதில், திருமணம் என்றால் என்ன என்பது பற்றித் தெளிவற்ற கருத்தே கொண்டிருந்தேன் என்பதை நான் அறிக்கையிட்டாக வேண்டும். திருமணம் செய்திருத்தல் என்றால் என்ன என்பதைக் கற்றுக்கொள்வதில் நான் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளைச் செலவிட்டிருக்கிறேன் மற்றும் (எனது மனைவி உங்களுக்குக் கூறக்கூடும்படி) நான் இன்னும் அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியதாக உள்ளது. ஒருவேளை நீங்கள் ஆவிக்குரிய வகையில் புதிதாகத் திருமணம் செய்விக்கப்பட்டவராக, ஒரு புதிய கிறிஸ்தவராக இருக்கலாம். அப்படியிருந்தால், உங்கள் புதிய உறவில் அடங்கியுள்ளவை என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்வதற்கு, இந்தப்பாடத்தின் முக்கிய கருத்துக்கள் உங்களுக்கு உதவ வேண்டும். நீங்கள் கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கமாக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிவது அவசியமாக உள்ளது, மற்றும் நீங்கள் பின்வரும் பண்புகளை மேம்படுத்துவது அவசியமாகும்:

- உறுதிப்பாட்டுடனிருத்தல்.
- உண்மையுடனிருத்தல்.
- கனிகொடுத்தல்.
- உதவிசெய்பவராயிருத்தல்.
- அன்புகூருபவராயிருத்தல்.

இந்தச் சொற்றொடர்கள், கிறிஸ்துவுடன் உங்கள் தற்போதைய உறவை மிகச்சரியாக விளக்கப்படுத்துகின்றனவா? அல்லது அந்த உறவில் ஏதேனும் குறைவாக உள்ளதா? ஒருவேளை நீங்கள் மனம்துக்கித்துக் கர்த்தரிடத்தில் திரும்பி வருதல் தேவையாயிருக்கலாம் (நடபடிகள் 8:22). அவர் இன்னமும் உங்கள்மீது அன்புகூருகிறார் மற்றும் நீங்கள் அவரிடம் திரும்பிவர வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள் - நீங்கள் உங்கள் மேட்டிமையை ஒழித்தால் மாத்திரமே இது நடக்கும். நீங்கள் கர்த்தரிடத்தில் திரும்பிவர வேண்டும் என்றால், அதை இன்றே ஏன் செய்யக்கூடாது?

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

மிகப்பழைய விளக்கவுரையாளர்கள் ரோமர் 7:1-6ல் உள்ள ஒவ்வொரு விவரமும் "பொருந்திவர" அதை ஒரு விவரமான உருவகமாக ஏற்படுத்தினர்,

*ஆனால் இவ்வசனப்பகுதி ஒரு உருவகமாக இருப்பது இல்லை, இது விரிவாக்கப்பட்ட ஒப்புவமையாக (பேச்சு உருவகமாக) உள்ளது. இந்த எடுத்துரைப்பில், நான் உருவகத்தை மிகவும் வலியுறுத்துவதற்கு எதிராக எச்சரிக்கை செய்தேன். நான் எனது சொந்த நெறிமுறையை மீறியுள்ளதாகச் சிலர் நினைக்கலாம். நான் ஏற்படுத்திய ஒப்பீடுகள் யாவும் சட்டப்பூர்வ மானவை என்று நான் நம்புகிறேன், ஆனால் அவைகள் அவ்வாறு இருக்கின்றனவா இல்லையா என்பதை நீங்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இவ்வசனப் பகுதியை ஜெபநிறைவுடன், கவனநிறைவுடன் படியுங்கள், பின்பு இதை உங்கள் முழுபெலத்துடன் பிரசங்கியுங்கள் அல்லது போதியுங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 48. [2]*உங்கள் கலாச்சாரத்தில் இது உண்மையாக இருந்தால், நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு ஏற்புடைய விவரிப்புகளைப் பயன்படுத்த விரும்பலாம்.* [3]Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of Romans,* rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 182. [4]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 193. [5]*அமெரிக்காவில் உரையைக் கேட்பவர்களுக்கு, ஜனாதிபதி ஜான் கென்னடியைக் கொன்ற லீ ஹார்வி ஆஸ்வால்டு ஒரு உதாரணமாக இருப்பான். ஆஸ்வால்டும்கூட விசாரணைக்கு நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப்படும் முன்பாகவே ஜேக் ரூபி என்பவனால் கொல்லப்பட்டான்.* [6]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 55. [7]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 271-72, n. 10. [8]*பவுலின் "தர்க்கவாதரீதியான குறைபாட்டிற்காக" எழுத்தாளர்கள் அவரை விமர்சித்துள்ளனர். ஏவுதல் பெற்ற மனிதர் ஒருவர், மனிதத் தர்க்கவாதச் சட்டங்களைக் கடைப்பிடிக்காதிருக்கிறார் என்பதினால், அவரை ஏவுதல் பெற்றிராத மனிதர்கள் விமர்சனம் செய்வதென்பது எவ்வளவு அடாவடித்தனமானதாக உள்ளது!* [9]*ஒரு மனைவியானவள், தனது கணவர் இறக்கிறபோது "மனைவி என்ற வகையில் மரித்துவிடுகிறாள்" என்பதைச் சுட்டிக்காண்பித்துச் சிலர் இங்கு உருவகத்தில் மாற்றத்தைத் தவிர்க்கின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அவள் இன்னமும் ஒரு பெண்ணாக இருக்கிறாள், ஆனால் அவள் இனியும் மனைவியாக இருப்பதில்லை.* [10]Morris, 273.

[11]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 93. [12]Adapted from Stott, 195; D. Martyn Lloyd-Jones, *Romans, The Law: Its Function and Limits (7:1-8:4)* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973), 51-52. [13]*சிலர் ரோமர் 7:1-6ஐத் தனிமைப்படுத்த முயற்சி செய்து, இங்கு திருமண முறிவிற்கு ஆவிக்குரிய காரணங்கள் எதுவும் இருப்பதில்லை என்று கூறுகின்றனர், ஆனால் ஒரு பாடக்கருத்தைப் பற்றி வேதாகமம் கூறுகிற எல்லாவற்றையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்பது விளக்கம் அளித்தலுக்கான ஒரு அடிப்படைக் கொள்கையாக உள்ளது.* [14]Vine, 87. [15]Stott, 195. [16]John MacArthur, *Romans 1-8,* The MacArthur New Testament Commentary (Chicago: Moody Press, 1991), 362. [17]*ரோமருக்கு எழுதிய நிருபம், 1 என்ற புத்தகத்தில், "குற்றம் சாட்டப்பட்ட வகையில் குற்றவாளிகள்!" (1:18-25) என்ற பாடத்தில் 1:13க்கான விளக்கவுரையைக் காணவும்.* [18]MacArthur, 364. [19]*உங்கள் உரையைக் கேட்பவர்கள் வாழும் இடத்தில், கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யக்கூடிய குறிப்பான வழிமுறைகளைப் பற்றிய*

*நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துங்கள்.* [20]Stott, 196.

[21]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 221. [22]இந்த நேர்மாறு Stott, 196ல் *கலந்துரையாடப்பட்டுள்ளது.* [23]*ரோமருக்கு எழுதிய நிருபம், 1* என்ற புத்தகத்தில், *"உண்மையான யூதர் தயவு செய்து எழுந்து நிற்பாரா? (2:17-29)"* என்ற பாடத்தில் ரோமர் *2:29* வசனத்தின்மீதான விளக்கங்களைக் காணவும். [24]Thomas, 50 (emphasis mine). [25]கிரேக்க வசனத்தில் *"ஆவி"* என்பதற்கு முன்பாகத் திட்டவட்டமான சுட்டுச்சொல் எதுவும் இல்லை என்பது, "spirit" *(சிறிய* "s"*ற்கான)* ஒரு விவாதமாக உள்ளது. இவ்வசனப்பகுதி நேரடியான அர்த்தத்தில், "in newness of spirit" *என்றே வாசிக்கப்படுகிறது.* [26]Stott, 197. [27]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 144.

---

# ரோமருக்கு எழுதிய நிருபத்தின் வரைகுறிப்பு

*அறிமுகம் (1:1-17)*

I. *போதனைப்பகுதி (1:18-8:39)*
   A. *ஆக்கினைத்தீர்ப்பு (1:18-3:20)*
      *1.* புறஜாதியாருக்கு
      *2.* யூதருக்கு
   B. *நீதிமானாக்கப்படுதல் (3:21-5:21)*
   C. *பரிசுத்தமாக்கப்படுதல் (6:1-7:25)*
   D. *மகிமைப்படுத்தப்படுதல் (8:1-39)*

II. *நடைமுறைப்பகுதி (9:1-15:13)*
   A. *விளக்கம் (9:1-11:36)*
      *1.* விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற கருத்து, இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங்களுடன் ஒப்புரவாக்கப்படுதல்
      *2.* விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்ற கருத்து, தேவனுடைய உண்மைத் தன்மையுடன் ஒப்புரவாக்கப்படுதல்
   B. *நடைமுறை (12:1-15:13)*

*முடிவுரை (15:14-16:27)*